**அக்டோபர்: 26**

## ஆண்டவருடைய உயிர்தெழுதலை குறித்த பேதுருவின் முதல் பிரசங்கம்.

**வாசிக்க: அப்போஸ்தலர் 2:14-36**

அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது. இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார், இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.




ஒரு சிறிய பெண்ணுக்கு பயந்து இயேசப்பாவை யாரென்றே தெரியாது என மறுதலித்த அதே பேதுரு, இங்கே ஒருபெரிய கூட்டத்தின் முன்னால் இயேசப்பாவை குறித்து பேசுகிறார். நான் பெரியவன், நீ சிறியவன் என எப்போதும் சண்டை போட்டு கொண்டிருந்த 11 சீஷர்களும் ஒருமனதாக சேர்ந்து, பேதுருவுக்கு பின்னால் நின்று தங்கள் ஜெபத்திலே துணை நின்றனர். இயேசப்பாவின் உபதேசங்களை வெறுத்து, அவரை சிலுவையிலறைந்தவரெல்லாம் அங்கே பொறுமையாக நின்று பேதுருவின் பிரசங்கத்தை கேட்டனர். என்ன ஆச்சரியம் செல்லகுட்டிங்களா. பழைய ஏற்பாட்டில் அவரைபற்றி சொன்ன எல்லா தீர்கதரிசனங்களும் நிறைவேறியது. நாம் கற்றுகொள்ள மூன்று குறிப்புகள்.

1) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமே பேதுருவை தைரியமாக பேசும் சாட்சியாக நிறுத்தியது.
2) பரிசுத்த ஆவியானவரின் பிரஸ்ஸனமே அங்கே கூடியிருந்த பற்பல பாஷைகாரை அமைதியாக நிறுத்தி சுவிசேஷத்தை கேட்க வைத்தது.
3) பரிசுத்த ஆவியானவரின் அன்பே பன்னிருவரையும் இணைத்து ஒரே இடத்தில் சாட்சியாக நிறுத்தியது.

நம்மால் செய்யமுடியாத காரியங்களை நமக்குள்ளே தேவ ஆவியானவர் வரும்போது நாமே அதை அருமையாக செய்வோம் என்பதை நமக்கு பிதாவாகிய தேவன் வெளிப்படுத்தினார்.

அதற்கு அவர்(இயேசு) மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்றார். லூக்கா 18:17

## ஜெபம்

கிருபையுள்ள அன்பு தகப்பனே, உம்முடைய நல்ல பரிசுத்த ஆவியானவர் மூலமாக எல்லாவற்றையும் செய்ய எனக்கு கொடுத்த பலருக்குக் நன்றி. இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

